# யூன் – 30 - வெள்ளி

### உரோமைத் திருச்சபையின் முதல் வேத சாட்சிகள்
### நான் விரும்புகிறேன் (மத் 8:3)

## முதல் வாசகம்: தொடக்க நூல் 17: 1,9 – 10,15 - 22

ஆபிராமுக்கு வயது தொண்ணூற்றொன்பதாக இருந்தபொழுது, ஆண்டவர் அவருக்குத் தோன்றி, "நான் எல்லாம் வல்ல இறைவன். எனக்குப் பணிந்து நடந்து, மாசற்றவனாய் இரு. மீண்டும் கடவுள் ஆபிரகாமிடம், "நீயும் தலைமுறைதோறும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரும் என் உடன்படிக் கையைக் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் கடைப்பிடிக்குமாறு உன்னோடும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரோடும் நான் செய்து கொள்ளும் உடன்படிக்கை இதுவே உங்களுள் ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும். பின்பு கடவுள் ஆபிரகாமிடம், "உன் மனைவியைச் "சாராய்" என அழைக்காதே. இனிச் "சாரா" என்பதே அவள் பெயர். அவளுக்கு ஆசி வழங்குவேன். அவள் வழியாக உனக்கு ஒரு மகனையும் தருவேன். அவளுக்கு நான் ஆசி வழங்க, அவள் வழியாக நாடுகள் தோன்றும். மக்களினங்களுக்கு அரசர்களும் அவளிடமிருந்து உதிப்பர்" என்றார். ஆபிரகாம் தாள்பணிந்து வணங்கி, நகைத்து, "நூறு வயதிலா எனக்குக் குழந்தை பிறக்கும்? தொண்ணூறு வயது சாராவா குழந்தை பெறப் போகிறாள்?" என்று தமக்குள் சொல்லிக் கொண்டார். ஆபிரகாம் கடவுளிடம், "உம் திருமுன் இஸ்மயேல் வாழ்ந்தாலே போதும்" என்றார். கடவுள் அவரிடம், "அப்படியன்று. உன் மனைவி சாரா உனக்கு ஒரு மகனைப் பெறுவாள். அவனுக்கு நீ "ஈசாக்கு" எனப் பெயரிடுவாய். அவனுடனும் அவனுக்குப்பின் வரும் வழிமரபின ருடனும் என்றுமுள்ள உடன்படிக்கையை நான் நிலைநாட்டுவேன். இஸ்மயேலைப் பற்றிய உன் வேண்டுதலை நான் கேட்டேன். அவனுக்கு ஆசி வழங்கி, அவனை மிகப்பெருமளவில் பலுகச் செய்வேன். பன்னிரு இளவரசர்களுக்கு அவன் தந்தையாவான் அவனிடம் இருந்து ஒரு பெரிய நாடு தோன்றும். ஆனால், சாரா உனக்கு அடுத்த ஆண்டு இதே காலத்தில் பெறப்போகும் ஈசாக்கிடம் என் உடன்படிக்கை நிலைநாட்டுவேன் என்றார். அவருடன் பேசி முடித்தபின், கடவுள் ஆபிரகாமை விட்டுச் சென்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர் ஆசி பெற்றவராய் இருப்பார்

## நற்செய்தி : மத்தேயு 8 : 1 – 4

அக்காலத்தில் இயேசு மலையிலிருந்து இறங்கிய பின் பெருந்திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது தொழுநோயாளர் ஒருவர் வந்து அவரைப் பணிந்து, "ஐயா, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்றார். இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!" என்று சொன்னார். உடனே அவரது தொழுநோய் நீங்கியது. இயேசு அவரிடம், "இதை எவருக்கும் சொல்ல வேண்டாம், கவனமாய் இரும். ஆனால் நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும். நீர் நலமடைந்துள்ளீர் என்பதற்கு அது சான்றாகும்" என்றார்.

**தியானம் :** எம்மைப் படைத்த இறைவனுக்கு நாம் அழிந்து போவது ஒரு போதும் பிடிக்காது. சந்தர்ப்பமும், சூழ்நிலையும் எம்மை கடவுளிடம் இருந்து பிரிக்க முற்படும். அப்போதெல்லாம் அவர் நமக்காக, நாம் திரும்பி வரும் வரை காத்திருக்கிறார். நற்செய்தியில் சந்திக்கும் தொழுநோயாளர் தமது விருப்பத்தை விட யேசுவின் விருப்பத்திற்கு முன்னுரிமை கொடுக்கிறார். அதனால் அவர் விடுதலையைக் கண்டு கொள்கிறார். இவ்வுலகில் துன்பங்களும், வேதனைகளும், சோதனைகளும் உண்டு. ஏன்? யேசு இவற்றை சந்திக்க வில்லையா? இவற்றின் வழியாகத்தான் நாம் கடவுளை சந்திக்க முடியும். மகிழ்ச்சியே வாழ்வென்றால் நாம் கடவுளை மறந்து போய்விடுவோம். இவ்வுலகில் வாழும் அனைவருக்கும் துன்பங்கள் உண்டு. துன்பம் பணம் படைத்தவருக்கும் உண்டு, ஏழைக்கும் உண்டு. எவ்வாறு ஆபிரகாம் தமது வாழ்வால், விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப் பட்டாரோ அவ்வாறு, நாமும் நமது விசுவாச வாழ்வில் நாம் நிலைத்து நிற்க வேண்டும். நிற்போமா?